

# “மலையாத்திரையில்”

## நடந்த

# ஸத் ஸங்கம் III

## “ப்ருத்வி”

பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# "மலையாத்திரையில்" நடந்த ஸத்ஸங்கம் III

"ஸ்ரீபுத்ரி"

# பொருளடக்கம்


1. பத்ரி ஸ்தல வரலாறு---116

௨. பத்ரி ஸத்ஸங்கம்---1௨௩

௩. மகாத்மாக்களின் அருளாசி---170

௪. விரக்தியின் விளக்கம்---17௩

5. குருவாயூர் கண்ணன்---176


எல்லாம் நீ!





# 4 ஸ்ரீ பத்ரி நாத்!!!
# ஸ்தல வரலாறு!!!


**ஸ்ரீ உத்தவர்** என்ற ஸ்ரீமஹான் நம்முடைய
ஸ்ரீ கண்ணனின்! நண்பர் எனச் சொல்லலாம். இந்த
உத்தவர் **யோக** புருஷர். யோகமும் உண்டு.
ஸித்திகளும் உண்டு. கண்ணனுடன் துவாரகையில், பல
காலம் வாழ்ந்தார். இவருடைய பூர்வ புண்ணியத்தால்,
கண்ணனால் அனுப்பப்பட்டு, கோகுலம் வந்தார் உத்தவர்.
**நான்!** என்ற அஹங்கார, அதிகார, ஆதிக்கம்!
இருந்த உத்தவர், கோகுலம் வந்து அங்கு
அறியாமல் உள்ள, கோபால, கோபியருக்கு! யோகம் போதிக்கவே
வந்தார். கோபிகைகளின் **பிரேமபக்தி**
சர்வார்ப்பண **சரணாகதி!** அதனால் அவர்கள்
பெற்ற அமைதி! உத்தவரை புரட்டிப் பிடித்துக் கொண்டது.
கோபிகைகளின், பூர்வமாக சர்வார்ப்பணம் தந்து
ஸாந்தியின் நிலையில், கண்ணனால் ஆத்ம ஞானம்
**பக்குவம்!** பெற்றதாக, கண்ணன் சொல்லக் கேள்வி.
(ஆத்மஞானம் பெற வில்லை)



விறகு அடிக்கும் கம்பை, (117)
விறகுடன் சேர்த்தே
கட்டி எரிப்பார்கள்.
பிணத்தை சுடும் தடியையும்,
அப்பிணம் எரிந்து முடியும்
போது அப்பிணத்துடன் போட்டு
எரித்து விடுவார்கள்.
விறகு அடிக்கும் கம்பானது,
அவ்விறகுகளை, அடி அடி யென
அடித்து, நொறுக்கி ஒரே கட்டாக
கட்ட உதவும். முடிவில் அவ் விறகு அடித்த கம்பையும்,
அவ்விறகுக் கட்டுடன், சேர்த்துக்கட்டி எரிக்கும்போது
அதையும், சேர்த்து எரித்து விடுவார்கள். தொடரும்.

துவாபரயுக முடிவு! கலியுக ஆரம்பத்தில்! கண்ணன் தாம் வந்த காரியம், முடிவுற்றது என, அறிவுறுத்தி, தம் உத்தவரை அழைத்து, கண்ணன் சொன்னான்:- அன்பான உத்தவா:- இன்றிலிருந்து ஏழாம் நாளில், துவாரகை! கடலில் மூழ்கிவிடும். அது சமயம், யாம் எம் தேகத்தை! **துர்மரண** நிலையால்! விட்டு விடுவோம். காரணம்:- எம்முடைய இந்த அவதாரமே, துஷ்ட நிக்ரஹமும் & இஷ்டஜன பரிபாலனமும் ஆகும்! துஷ்டர்களை **கள்ளம்! கபடம்! சூழ்ச்சி** இவைகளாலேயே, அழிக்க வேண்டும். அப்படி அழித்துமுடித்து விட்டோம். அக்காரியம் மகா **பாபமே!** அப் பாபகாரிய பரிஹாரமே! எம் தேகமும், துர்மரணம் அடைய வேண்டும் என்று, யாமே நிர்மாணம் செய்து கொண்டோம். எம் ஸ்ரீராமாவதார காலத்தில், வாலி என்ற ஒர் வானர வீரனுக்கு **மரண** கடன் பட்டிருக்கிறோம். மகாபலி என்ற, ஒர் சக்ரவர்த்தியிடம் (பக்தனிடம்) அவன் சிரசில் பாதம் வைத்து ஒர் பெரும் **பாகவத** அபசாரமும் செய்து கடன்பட்டிருக்கிறோம். யாம் உலகியல்! தெய்வீகம்! இவ்விரண்டிலும், ஸ்ரீ பகவானை





பிணச் சுடும் தடியானது, அப்புலையனால் அத்தடி கொண்டு, அப்பிணத்தை அடிஅடியென அடித்தும்! குத்து குத்தென குத்தியும்! அப்பிணம், வேகவைக்கப் படும். முடிவில் அப்பிணம் எரிந்து முடியும் போது, அத் தடியையும், அப்பிணத்துடன் போட்டு எரித்து விடுவார்கள். (118)

இதை உதாரணம் காட்டி, எம் பிரபு கண்ணன் தரும் அருமையான விளக்கமாவது? தொடரும்.

இருந்தாலும், ஸத்திய (வாக்கிற்கும்) தர்மச் (செயலுக்கும்) கட்டுப்பட்டே ஆக வேண்டும். ஆகவே எமக்கு யாமே, ஓர் காரண காரியத்தை, காட்டி தண்டனையை, ஏற்கப் போகிறேன்.

என் அன்பான உத்தவா! நீயோ! யோக ஸித்தியில் வல்லவனாக இருப்பதால், (ஸாதகர் & பக்தர் **ஸமாதியே** ஆவ்யமாக இருப்பதால்) இமாலயாவில் உன் சமாதியால், ஓர் ஆலயம் நிர்மாணம் ஆகி, அது அனைவர்க்கும், வழி காட்டியாக, அமைய வேண்டும். இமயமலையில், பனிபடர்ந்த ஓர் இடத்தில், ஓர் உத்தம பக்தனை, **பத்ரி** என்பவன், தன் ஸ்ரீமாதாபிதா சேவையுடன், தன் **தர்மபத்னியுடன்**, குடும்ப ஸமேதனாய், லௌகீக **தபஸ்வியாய்**, வாழ்ந்து வருகிறான். அவன் வாழும் இடம், ஓர் சிறிய வாஸஸ்தலமாக இருக்கிறது. அதை ஸ்ரீமான்கள் போக்கு வரவு செய்து, தர்ம ஸ்தாபனமாக ஆக்கி விட்டார்கள். அதன் நாமம் **பத்ரிஆஸ்ரமம்**! என்பதாகும். அவன் உபாசனை ஸ்ரீக்கிட!



எம்மாயா தாவம் (119)
ஸ்ரீ பகவானைக் கண்டு
தானும் தேவர்களும்
அழைக்கப் போவது. அவர்கள்
மனம் பணைந்து பணிக்க
நொந்து வருந்தி, வேண்டி
கஷ்டப்பட்டதால், கண்டு
நாள்கள். அம்பெருமானை
காரணமான, இந்த ஸ்தல
பணைய பணித்துக் கொண்டு, நினைக்க வேண்டும்
முடி, அடிமுடி அடிபட்டு உதிரம் கொட்டிக் கொண்டிருக்கும்
என அம்பால் பக்தனின் அரிமானம் என, தொடரும்.

**ஸ்ரீமந் நாராயணன்** ஆகும்.

ஆகவே, அம் மூர்த்தியை, ஸ்ரீ அடியார்கள், ஸ்ரீ பத்ரி நாராயணன்
என நாமம் வைத்து, வழிபட்டுக் கொண்டாடி வருகிறார்கள்.
நீ அவ்விடம் சென்று, அதன் அருகில், ஓர் குடிசையை
அமைத்து, சாதனை செய்வாயாக. அது சமயம், **என்**
**ஆத்மமூர்த்தியை** அங்கு வைத்து, நீ
பூஜிப்பாயாக. (என்றான். அதன் பின் இருந்து, ஓர் மூர்த்தியை
எடுத்து அதை உத்தவரிடம் கொடுத்தான் கண்ணன்.
அது **மூன்று** வயதுப் பாலகனின், ஓர் கையில் வெண்ணெய்
தாங்கிய, விக்ரஹம் ஆகும்.) உன் சரீர வாழ்வில், உனக்கே
ஓர் நிறைவு உண்டாகும். அது சமயம், அம் மூர்த்தியை,
**பேதமற்ற** சமதிருஷ்டி உள்ள இடத்தில், பிரதிஷ்
டை செய்து விட்டு, நீ சமாதி ஆகுவாயாக. நீ பூஜித்து
வழிபட்ட இடத்தில், ஓர் மூர்த்தி எழுந்தருளுவார்.
அவர் நாமம் **ஸ்ரீ ஸத்திய நாராயணன்**
ஆகும். அது உன் **சமாதியின்** மேல் அமைந்த ஆலயமாகும்.



உலகோருக்கு காட்சிக் கொண்டு, யாம் ஆனந்தமாக இருந்தோம். இதன் முழு அர்த்தம், என்ன வென்றால்? (120)

அடாது செய் பவன் படாது படுவான்! என உணர்த்தி, ஸத்திய தர்மத்தை நிலைநாட்டிடவே முடிந்தது.


ஸ்ரீபத்ரி நாராயணனையும் & ஸ்ரீ ஸத்திய நாராயணனையும்! இணைந்து ஏன்று விருவர். அது உன்சமாதியின் பெருமை ஆகும். அதுவே பத்ரிநாத் என்றும், பத்ரிநாராயணன் ஆகும். அங்கு? இல்லற வாசிகளுக்கு, ஸ்ரீபத்ரி நாராயணன் ஆகவும்! துறவற வாசிகளுக்கு, ஸ்ரீ ஸத்திய நாராயணன் ஆகவும்! இருந்து இருபிறவிகளில், அருள்பாலிப்போம் என எம் பிரம்ம உத்தவரை, வடதிசையை நோக்கி அனுப்பி வைத்தான். அந்த உத்தவரும், பவதாவம் இருந்து ஞான யோக நிஷ்டையாகி, ஸமாதிநேரம் ஸமயம், அக்கணமே விக்ரஹத்தை, பிரதிஷ்டை செய்யும் நிமித்தமாக, உடனே குருவாகிய வியாஸ பகவானையும்! வாயு தேவனையும்! வரவழைத்து, அவ்விக்ரஹத்தை, முறைப்படி பிரதிஷ்டை செய்ய தாழ்ந்து பணிக்க, அவ்விக்ரகம் ஸமத்துவ பூமியாகிய, கேரளத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. குருபகவானும் & வாயுதேவனும்! சேர்ந்து பிரதிஷ்டை செய்த அந்தஸ்தலம், குருவாயூர் என, பிரபல்யமாயிற்று.



பத்ரிநாத்தில் உத்தவர் சமாதி ஆன பின்பு அவர் பரம பதம் என்ற வைகுண்டம் சென்றார். அங்கு ஸ்ரீ பகவானுடன் பகவானும் இருந்தார். பக்த உத்தாரணம் நிமித்தமாகவும், பக்தியின் ஒழுக்க நீதி தர்மத்தை போதிக்கவும் பரம பதத்திலிருந்து ஸ்ரீ பகவானால் அனுப்பப்பட்ட, ஸ்ரீ உத்தவர், ஸ்ரீ நாமதேவராக திரு அவதாரம் செய்தார் ஸ்ரீ உத்தவர். (21)

குருவாயூர் அருகில், **மம்மியூர்** என்ற, சிவஸ்தலம் உண்டு. அம் மம்மியூர் இறைவராகிய, ஜடாதாரியே, குருவையும்! வாயுவையும்! அழைத்து, எம் அருகிலேயே, எம் மைந்தனை பிரதிஷ்டை செய்யவும் என கேட்டுக் கொண்டாராம். ஆகவே, ஒரே இடத்தில் ஸ்ரீ சிவபெருமானையும்! ஸ்ரீ கண்ணபிரானையும்! தரிசிக்கலாம்.

ஸ்ரீ பத்ரிநாத் அருகில், ஸ்ரீ சரஸ்வதி என்ற **கலைமகளுக்கு!** உற்பத்தி ஸ்தானமும் உண்டு. அவர் உறைவிடமாக, ஓர் குகையும் உண்டு. அதன் அருகில் தான் வேத வித்தகர் **வேதவியாசர்! ஸ்ரீமத் பாகவதம்** சொல்லவும்! அதை ஸ்ரீ பிரணவ ஸ்ரூபியாகிய, ஸ்ரீ விக்ன (ஹந்தகனை) **விநாயகர்!** தம்முடைய, ஒன்றை **கொம்பை** ஒடித்து, அதனால் வரைந்ததை, எழுதியதாகவும், ஸ்ரீ மஹான்கள் சொல்வர். கலைமகள்! வேத வியாசர்! விநாயகப் பெருமான்! ஆகிய மூவரும் அருகருகே அமர்ந்து ஓர் ஸத் ஸங்க **ஸத்** காரியத்தை, முடித்த இடம் இப் பத்ரிநாத்தாகும்.



(22)


ஸ்ரீமத் பாகவதத்தை ஸ்ரீ வேத வியாசர் சொல்லும் போது கலைமகள் உடன் இருந்து அருள்பாலித்ததாகவும். ஆகவே அங்கு தீர்த்தம் சரஸ்வதி தீர்த்தம் என்றும் ஸ்ரீ விக்ன விநாயகர் (பிரணவ சொரூபியே) பக்தி & ஞான ரஸம் கோர்த்து எழுதியதாகவும், இங்கு வேத குகையில் பாராயணம் செய்ததாக அங்கு தனித்தனியே ஓர் புண்ணிய பூமியாகவும், ஆகவே ஸ்ரீ பத்ரிநாத் யோக ஸித்தர்கள் வாழும் தியான இடம்.

இப் பத்ரிநாத்தின், விசேஷம் என்ன வென்றால் ?

**சதி & பதி** இணைந்து! இல்லற தர்மத்தை கடைப்பிடித்து, **ஸ்ரீமாதா, ஸ்ரீபிதாவின் சேவையை!** மேற் கொண்டு, ஸ்ரீபகவானை தரிசித்து, மேன்மை அடைந்த இடம், இந்த ஸ்ரீ பத்ரி நாராயணை சேர்த்தி ஆலயம் இதைப் போல்?

ஸ்ரீமாதா & ஸ்ரீபிதா! சேவை செய்த ஸ்ரீ புண்டரீக பக்தனுக்காக, அமைந்த இடம் ஸ்ரீ பண்டரிபுரமே! ஸ்ரீபாண்டுரங்கனும்! விட்டலனும் ஆலயம்.

மேலும், இப்பத்ரிநாத்தில், உத்தவர் **ஸமாதி** ஆகி அதில் அமைந்த, ஆலயமாக இருப்பதால், ஸித்தர்கள் & யோகிகள் & பக்தர்கள்! அனைவர்கள் சாதனை பூமியாக, **துறவறம்** மேற் கொள்ளத் தகுந்த ஸ்தலமாகவும் இருக்கிறது. பத்ரி நாராயணன்! குடும்ப தெய்வம்! என்றும், ஸத்திய நாராயணன்! துறவற தெய்வம்!! என்றும், சொல்லப் படுகின்றனர்.




# "ஸ்ரீ பத்ரியில் நடந்த ஓர் ஸத்ஸங்கம்!

இடம்:- பத்ரியில் ஓர் குகை!

காலம்:- அதிகாலை 3 மணி!

பங்கேற்பவர்கள்:- யோக புருஷர் உத்தவர்!
மஹா யோகி மைத்ரேயர்! இவ்வூர பக்தன் பத்ரி!
ஸ்ரீ கண்ணன்! இவ்யோக ஸித்த புருஷர்களுடன், ஓர் வைத்தியம்!

பத்ரியில் இந்த நதைக்கென ஓர் அறை கொடுக்கப் பட்டிருந்தது. அங்கு அதிகாலை 3 மணி அளவில், தூக்கம் கலைந்து எழுந்து அமர்ந்திருந்தது. அது சமயம் மின்னலைப் போல், ஓர் பிரகாசம் தோன்றியது. அவ்வொளி ஓர் **நீண்ட வட்டமாக** ஓர் ஏழு அடி உயரமாக, ஒளி வட்டமாகத் தோன்றியது. யாரோ ஓர் ஸ்ரீமஹான் வந்திருப்பதாக தோன்றியது. சற்று கூர்ந்து நோக்கிய வண்ணம், வந்திருக்கும் ஸ்ரீமஹாத்மாவுக்கு, நமஸ்காரம். யார் எனச் சொன்னால் நலமாயிருக்கும் என்றோம். நீதான் மஹா சமர்த்தனாச்சே! யார் என சொல்வார்ப்போம்? குரல் மட்டும், கம்பீரமாக வந்தது. சொரூபத்தைக் காட்டமறுத்தது போலும்!



அக்ரூரஜீ கேட்டதும்; எப்போதோ? எங்கேயோ?
கேட்டதாக தெரிகிறதே? சில விஷயங்கள் தெரிந்தது

ஓ ஓ! உத்தவஜாரா?

என்றேன். உடனே அவ்வுருவம்! தடையின்றி,
பிரத்தியக்ஷமாயிற்று. அது உத்தவர்தான்.

ஸ்ரீ உத்தவர் :- ஓ பாவகோபால ராமா! எப்படி
என்னை கண்டு கொண்டாய்? நீயோ! பலே பலே!

எமட்டன்! என்பது சரியாக இருக்கிறது.


(எமட்டன் :- எமன் என்ற காலதேவனை, தன் வசம் கொண்டவன்)

வைத்தியம் :- ஆமாம் மஹாத்மா! பாவகோபாலராமா!
என்றீர்களோ! அதன் பொருள் என்ன?


ஸ்ரீ உத்தவர் :- உன் கண்ணனாகிய! எம் கோபாலனை!
நீயாகவும்! நீயே கோபாலன் என்றும், ஆனதாக பாமர
என்று, எம் அபிமானத்தால் பாவனை பண்ணினேன்.
அவ்வளவுதான்?

வைத்தியம் :- கோபாலன் என்றால்?


ஸ்ரீ உத்தவர் :- பசுக்களை எந்த குறையும் இன்றி மேய்ப்பவன்.
அதாவது ஜீவபசுக்களை விஷமம்!
அறிந்து, விதி வழி நடத்துபவன். தெரியாதவன் போல்,



நடிக்கிறாயே? எம் கண்ணனே! கபட நாடகன் நீயோ!
காட்சியின் நடிகன். எங்களை திறம்பட
நடித்துக் கொண்டிருக்கிறாய்? உன்னை தட்டிக்
கேட்க, எவரும் இல்லை. ஆமாம் பாபா! எம்மை
எப்படி, எம் குரல் வைத்தே கண்டு பிடித்தாய்?
வைத்தியம்:- ஓ எம் ஐயனே! உத்தவ தாஸரே!
உண்மை! எம் பிராபு உடன்! பிருந்தாரண்யத்
தில், இருமுறை சந்தித்திருக்கிறோம். ஆனால்
நேருக்கு நேர், பேசியது இல்லை. அன்பர்களுடன்
உரையாடும் போது, உம் குரல் கேட்டிருக்கிறோம்.
அதை வைத்துத்தான், தெரிந்து கொண்டோம்.
ஸ்ரீ உத்தவர்:- உன்னை எம் பிராபுவுடன் (கண்ணனுடன்)
பார்த்த ஞாபகம் எமக்கில்லையே? அது சமயம் அந்த
போல் ஒளி வட்டம் தோன்றியது. பகவான் சொரூபத்
துடன் காட்சி தந்தார். அவர் மகாயோகி ஸ்ரீ வைத்தி
ரேயர் ஆவார். அப்படி வந்தவர் கூறினார். ஓஓஓ!
உத்தவரே! உமக்கு எதுதான் ஞாபகம் இருக்கும்?
யாவும், நீயும்! நான்/எனது! என்ற
அகங்கார, மமகார, ஆதிக்கத்தை விடவில்லை.
பின்னர் எப்படி பணிவையே தாயாகக் கொண்ட பாபாவை
உணர முடியும்?



ஸ்ரீ உத்தவர்:- அந்த நேரத்தில்! அந்த க்ஷணத்தில்!
எல்லோருமே யோகத்தோடு கூடி இருந்தவர்கள்தான். அதனால்
தான், அஹங்கார, அதிகார, ஆதிக்கத்தை விடாமல்
இருந்தோம். இக்கலியுகத்தில், யோகம் **முறைப்படி**
கற்றவனானாலும் இல்லை. (அனுபவம் பெற்றவர் எவருமே இல்லை.
முன் எழுதிய ஏட்டின் வாசகத்தை **திரித்து** படித்துக் கொண்டு,
பள்ளிப்பாடத்தை, பேசுகின்றனர்; செய்கின்றனர். முறை
யோடு, சிரத்தையோடு, ஒருவரும் மானவனும் இல்லை
ஆனால் யோகம் என, ஒன்று அனுஷ்டிக்கப்படுகிறது) இக்கலியுகத்தில்
சரணாகதி என்ற, சர்வார்ப்பணம் (மிகமிக எளிதாக, அனுபவத்தை
கொடுக்கிறது என்பதை நம்மவர், அனைவரும் உணர்ந்தோம்.
இப்படி பேசிக் கொண்டே எதிர்மலையின் தாள்வரையில்
**பனிமலைச்** சரிந்து கிடந்த ஓர் இடுக்கில்!
ஓர் நுழைவாயிலில், நாங்கள் மூவரும், நுழைந்தோம்.
நோக்கு, உள்ளே ஆழமான ஓர் இடம் இருந்தது. அங்கே இயற்கை
யின் நியதியால், எந்த தீபமும் (பந்தமும்) இல்லாமல்,
ஓர் பிரகாசமான, **ஒளியாய்** ஒரே அமைதியின்
ஆனந்தம்! நிறைந்திருந்தது. உள்ளே சென்ற பிறகு
தான், பார்க்க முடிந்தது. அது ஓர் **மஹாசபை**
என விளங்கியது. அங்கே?



வழவழப்பான, மிருதுவான, **பாறைகளோ!**
ஆசனமாக இருந்தது. ஆனால் எந்த ஆடம்பரமும்!
அலங்காரமும்! இல்லை. அங்கு எம்கண்ணன் ஒருவனே!
**அருவேஷம்** தாங்கிய நிலையில், இருந்தான்.

(A) சங்கு! சக்கரம்! கதை! பத்மம்! இத்யாதிகளுடன், ஓர்
**விராட** ரூபம்! (அதை நாராயணன் என சொல்லுவரும்)


(B) **9** வயது பச்சிளம் பாலகன் கண்ணன்!

(C) பக்தோத்தமன் **பத்ரி!**

(D) நான்கு ஸித்த யோகபுருஷர்கள்! ஆகிய நால்வரும்,
அமர்ந்திருந்தனர். நாங்கள் மூவரும் சென்றவுடன்,
**முகமன்கூறி** வரவேற்று! நாங்களும் சென்று
அமர்ந்தவுடன், சபை அமைதியானது.

<u>நாராயணன்</u>:- என்ன எளிமையின் அம்ஸ பாபமே! உன்
பிரயாணமும்! உன் அடியார்கள் பிரயாணமும்! எப்படி அமைந்
திருந்தது?

<u>வைத்தியம்</u>:- அவர் திருவடிகளில், வணங்கி எழுந்து, சர்வ
லோகசரண்யா! கமலபாதா! கருணையின்வடிவே! **உன்**



**பாத, கமல** தரிஸன ஸ்பரிசத்தால், அவர்களுடைய **பாதக, மலங்கள்** பஸ்பமாயினம் பின்னர் தூல உபாதையோ, மனோ சிரமமோ, எப்படி இருக்கக் கூடும்


நாராயணன்:— உன்னைப் பற்றி, கூறவில்லையே பாபா அதேன்?

வைத்தியம்:— (கலகலகலகலவென சிரித்துக் கொண்டே) எமக்கெனத் தனியே இருப்பு உண்டா பிரபோ? அவர்களே **யாம்!** யாமே **அவர்கள்!** நீயே **யாம்!** **யாமே நீ!**

நாராயணன்:— ஓகோ! கோ! கோ! **அத்வைத** ஞானியோ?

அவ்வைத்தியம், அவன் கால்களை பற்றி கதறி அழுது, அவன் பாதங்களை, கண்ணீரால் அலம்பிக் கொண்டு, பணிவுடன் கூறிய வாசகம்:— எம் அன்புத் தந்தையே! நீ கூறியது விந்தையே! இந்த ரஹையை, இவ்வுலகத்தில் நடமாட விட்ட தந்தையும், தாயும்! நீயே! எம்மை வளர்த்து ஆளாக்கினை! உன் திருப்பெயரால் **பஜனம்** ஆவேம்.

(பக்தன் ஆவேம்)



உரிய கணவனைப் பார்த்து **ஸத்குருவிடம்** (கைபிடித்து) ஒப்படைத்தாய். இப்போது **புகுந்தவீடு** சென்ற யாம் பிறகு **பிறந்தவீட்டை** மறப்பது தான் முறை.


எம்மை கைபிடித்த கணவனே! **கண்+அவன்**

கணவன் அவன் ஆகும். பிறந்த வீட்டுக்கு பெருமையும் புகுந்த வீட்டுக்கு **சிறப்பும்** கொடுப்பதே எம் கடமை யாகும். உன்னிடம் **பக்தி** அவரிடம் **ஞானம்**


உன் பக்தியே ஞானமாக மாறியதே தவிர, ஞானம் வேறு எங்கிருந்தும் வந்து விடவில்லை. யாம் அனைத்தும் என்று உணர்ந்தது நீதான், அவசியம் பகுத்த வேண்டும்?

நாராயணன்:- மன்னித்து விடு மாயா! உன்றிலே எப்படி உன்னாது என பரீக்ஷித்தோம் அவ்வாறு தான் நீ என்றென்றும்; எம் குழந்தையே! இது உறுதி.

வைத்தியன்:- ஹே பிரபோ! சங்கு சக்கரா! பீதாம்பரா! கதாதரா! கருணா சாகரா! கருமமேகரா! ஸ்ரீ ஹரிய



வேண்டுகோள்? அதாவது வேறு எந்த பக்தனிடமும்!
தபஸ்வியிடமும்! ஞானிகளிடமும்! உன் காட்சி!
இந்த **கோலத்தில்** சங்கு! சக்கரம்!
கதை! பத்மம்! என்ற, பீதாம்பர தாரியாய் அலங்கார
சொரூபனாய், சேவிப்பவாம். அது உனக்கே பொருந்தும்.
அவர்களுக்கும் தரும். இந்த ரூப தேஜஸும்
மட்டும், எந்த ஆயுதமும், இல்லாமல் **எளிமை**
யாக வந்தால் போதும்.
நாராயணன்:- அதற்காக தானே, இந்த எளிமை,
கோபால ரூபமாக இருக்கிறேனே? போதாதா?
கண்ணன்:- அவர் சொல்வதும், சரிதானே பாபா?
அப்படியும் காணலாம்! இப்படியும் காணலாம்! இங்கு
**பக்தியில்** உள்ளவர்களுக்கு, அந்த காட்சி!
உனக்கு மட்டும், எம் எளிமையான இந்த காட்சி! ராம் காட்சியை நீங்கள் பலரும் விரும்புவதில்லை?
பக்தன் பக்தி என்பதால். அவர் வாசகம்:- இந்த பாபா
யார்? இந்த அலங்கார சொரூபத்தை, அவசியம்
செய்கிறாரோ? இவருக்கு பக்தியைப் பற்றி, சரிவர தெரியாதோ?
நாராயணன்:- குழந்தாய் பக்தி! இந்த பாபாவை அப்படி
சொல்லாதே! இவன் **பக்தனில்** பக்தனல்ல.



131

பக்தனான் பக்தனவான். இவன் இப்போது தான் முதன் முறையாக தரிசிக்கிறான். இவன் ஞானியின் சிறந்த ஞானினை, சொல்லக்கூடாது. ஞானிக்குள், சிறந்த ஞானி ஆவான். இவனை நமஸ்காரம் செய், என்றார் நாராயணன். பத்ரியும் பந்து நமஸ்காரம் செய்தான். நலம் பெறுவாய் என அப் பைத்தியம், ஆசீர்வாதம் செய்தது. (சற்று கூர்ந்து கவனித்த பத்ரி)

பத்ரி:- இவரை, அமரர் நாற்பது வருடங்களுக்கு முன், இந்த ஆலயத்தின் முன், பார்த்திருக்கிறேனே! அப்போது இவருக்கு **நாற்பது** வயது இருக்கலாம். இப்போதும் இவர், அப்படியேதான் இருக்கிறார். இவர் நடை, பேச்சு, பாவனை எல்லாம் அந்த **இளமை** அந்த **எளிமை**, அந்த **இனிமை** அப்படியே இருக்கிறதே, இதன் காரணம் என்ன? இவர் யோகியா?

(நாராயணன் இடைமறித்தார்) இந்தா பார் பத்ரி! எல்லோரையும் போல், இவனை எண்ணி விடாதே, இவனுக்கு புகழ்ச்சி என்றாலே **விஷம்** ஆகும். ஆகையால், புகழ வேண்டாம். நீ சொல்லியபடி, இவன் ஓர்




(32)

பத்ரிநாத்தின் ஓர் விசேஷம் என்ன வென்றால் ஓர் பக்தவ ஆன்மாவானவன்! ஸ்ரீமாதா ஸ்ரீபிதாவுக்கோ மாமா & மாமிக்கோ! தாத்தா & பாட்டிக்கோ இணைந்து நிலையில் தெய்வமாகவோ! பெரியவர்கள் என்றே; தொடரும்

நல்ல சிறந்த நடிகன்தான். எப்படி என்றால்? நடிப்பின் வேஷம் போடும், சிறந்த நடிகனுக்கு இளமை யாதவும், வேஷம் போடவும் முடியும். முதுமையான பழமாகவும்! வேஷம் போடவும் முடியும். அங்கு அம்பைத்தியம் இடைமறித்து சூரியதாவது :- வந்த காரியத்தை கவனியாமல், ஏதேதோ பேசி காலம் கடத்த வேண்டாம். ஒருதந்தாயிபத்ரி :- உன் ஸ்ரீ மாதா & பிதா! சேவையின் நிமித்தம்! ஸ்ரீ பகவான் வந்தாரா? அல்லது சக்தி பதி! இணைந்து ஸ்ரீ மாதா பிதாவுக்கு சேவை செய்தவன் பயனை ஸ்ரீபகவான் வந்தானா?

பத்ரி :- ஓம் அருமை பாபா ஜீ! புண்டரீகன் என்ற பக்தன் மட்டும் தனியே தன், ஸ்ரீமாதா! ஸ்ரீபிதாவுக்கு! சேவை செய்தவன் நிமித்தம், ஸ்ரீபகவான் வந்தது பண்டரி! இங்கு நாம் தனித்து, சேவை செய்யாமல், எம் மனைவியுடன் இணைந்து, (அவள் மனம் ஒத்து) சேவை செய்தவன் மையமாய், எக்கையன் தம்பணிமலையில், எம்மை தேடி நாடி ஓடி வந்தான். அத்தோடல்லாமல், எம்பாபு கேதாரேசனும்! ஸ்ரீ அம்பிகை சமேத ரத காட்சி தந்தார்.




ஸ்ரீமந் நாராயணனைத் தனித்து நின்றாலும், தேஜோ பரமேஸ்வரன் அம்பாள் சமேதராகவும், வந்ததாக உணர்கிறேன்.


ஸ்ரீ உத்தவர்:- எம்மைப் பற்றி என்ன உணர்கிறாய் பாபா? யாம் ஸித்தரா? யோகியா? பக்தரா? ஞானியா? உன் கூர்ந்த திருஷ்டியால், அருட்பார்வையில், எப்படி தோன்றுகிறது?

வைத்தியம்:- ஹே மஹானுபாவா! உத்தவதாஸரே! உணர்ந்திருக்கிறேன். உம்மைப் பற்றி, நேரடியாகவும், கண்ணன் மூலமாக அல்ல. அவன் அம்ச எந்தையின் திருவடிகள் மூலமாக 1984ல்! அவனுடன் 2 மாத ஸ்ரீமான் ரங்கன் மூலமாக அதன் மூலமாகவும். காவம், பாடம் கேட்டு, அனுபவித்து, இப்படி நேரடியாக ஸ்ரீ பக்த விஜயங்களின் மூலமாகவும், உணர்ந்திருக்கிறேன் பிரபோ!!! தனியே, உணர்ந்திருக்கிறேன்.

ஸ்ரீ உத்தவர்:- ஹே பாபா! இம் மூன்றிலும், உம் அனுபவமும் என்ன என்பதை வரிசைப்படுத்திக் கூற முடியுமா?

வைத்தியம்:- எந்தையே! இது உம் விளையாட்டா? எல்லாம் **நாமமே!** அது **ரூபமே!** அது **யாமே!** இனிப் பதிலைக் கேள்! இருந்தாய் உத்தவா!

① த்வாபர யுக ஆரம்பத்தில் வைகுண்டத்தில் ஸ்ரீ பகவான் நாராயணனின் திருச்சபையில், சம அந்தஸ்துடன் இருந்தாய். அப்போது, உனக்கு, எந்த நாமமும் இல்லை.



பணிவது சாதகன் வேலை! அப்பணியின் விடையாக நீங்கள் அருள்வது ஸ்ரீ பகவான் காரியம் ஆகும். இந்த நியதியால் பெரியவர்களுக்கு தனித்து இல்லாமல் (134)

**தம்பதி** சகிதமாய்


பணிவிடை செய்வது பெரும் பாக்கியம் ஆகும். நீங்கள் அருள் கிடைக்கும்! முடிந்தது.

(2) பின் அதே நாராயணன் தன், எட்டாவது திருஅவதாரகாலத்தில், உன்னையும் சேர்த்து அழைத்துக் கொண்டு வந்துவிட்டான். இது துவாபர யுகத்தின் கடைசி! கலியுக ஆரம்பம். அப்போதுதான், **உத்தவர்** என்ற, நாமம் பெற்றாய்.

(3) உண்மை வலிமையால் **யோக** சாதனை! கடுமையாக செய்து, சித்திகளும், கைவரப் பெற்று யோக சித்தபுருஷன் ஆனாய்.

(4) பின் கண்ணன், தேவரும் அறியப்படாத கோபிகைகளால், பிரேமை பக்தியும்! பரிபூரண சரணாகதியும்! பெற்று அதனால் **!ஸாந்த** மூர்த்தியானாய். ஆனாலும், பவகாலம் முடிகிய, அஹந்தை உன்னுள் ஓர் **ஓரமாக** பதுங்கி இருந்தது. இதை **நீ** அறியாய்! எமதய்யன் **கண்ணன்** ஒருவனே அறிவான்.

(5) அந்த அஹந்தையை, போக்கவே நிமித்தமாகவே, உன்னை பண்டரியில், **நாமதேவராக** அவதாரம் செய்ய பணித்தான், எமதய்யன் கண்ணன் என்னும் திருடன்.




6 அந்த நாமாவதார காலத்தில், கண்ணனாகிய பாண்டுரங்கனிடம்! 6 வயது முதல் 48 வயது வரை!
42 ஆண்டுகள்! சேவை செய்த தன்மையால்,
அஹங்கார மமகாரம்! இரண்டும் படிப்படியாக அழிந்து ஒரு பக்குவம் அடைந்தாய்!


7 உன்னை ஞானியாக்க, எம் பாண்டுரங்கனே, ஒரு முறை செய்தான்! அந்நியரால் வினயம்! மனமும்!
பரிபாகப்பட்டு வந்ததும், எம் இறைவன் உனக்கு உன்னை ஸ்ரீ ஸத்குரு! விசேஷோபதேசம்
அனுப்பி வைத்தான்!

8 ஸ்ரீ ஸத்குரு கிருபையால்! ஆத்மஞானமும் பெற்றாய். ஆனால் உன் ஸங்கல்பமும் ஸ்ரீ பகவானுடைய அன்பு கட்டளையும்! இணைந்து, நீயே ஒரு ஜன்மா எடுத்தாய். அதுவே துகாராம்! ஆகும். அந்த துகாராம் அவதாரமே! ஜீவன் முக்தி நிலையாகும்.

ஸ்ரீ உத்தவர்:– தேவாபாகீ! நீ இதுவரை சொன்னவை அனைத்துமே! ஸத்தியமே! ஆனாலும் இதில், ஒரு சந்தேகம்



தோன்றுகிறது. அதை கேட்கலாமா?
வைத்யம்:- அவசியம் கேட்கலாம்.
ஸ்ரீ உத்தவர்:- என் நாமாவை உத்தவர் என்று எதை வைத்து கூப்பிடுகிறாய்?
வைத்யம்:- ஸ்ரீபகவானுடன் பால்ய பக்தியில் இருக்கும் போது, உனக்கு நாமா இல்லை. அப்போது ஓர் **கணமே**
கணம் என்றால் ஸ்ரீபகவான் அல்ல பகவானைப் போல் பகவான் அம்சம் பொருந்தியது, எனப் பொருள்படும். பின் எம் கண்ணனுடன், அதுதான் எங்கும் போகுதான், உத்தவர் என்ற நாமம் பெற்றாய்.
ஸ்ரீ உத்தவர்:- பின்பு சொல்லும் நாமதேவர்! துகாராம்! இவை எல்லாம் எப்படி பொருந்தும்?
வைத்யம்:- அவை காலத்திற்கேற்ற, நாடக நடிக **வேஷ** நாமம் ஆகும். அது தற்காலிக நாமம் ஆகும்.
ஸ்ரீ உத்தவர்:- இந்த யாத்திரையில், எம் சமாதியில், இந்த ஆலயம் எழுப்பப்பட்ட காரணம் என்ன?
வைத்யம்:- ஸ்ரீபகவான்! ஒரு இடத்தில் பிரதிஷ்டை ஆவதானதும்! ஸ்ரீபகவான் பிரபல்யப்படுத்தானதும்! அங்கு ஓர் ஸாதுக்களோ! பக்தர்களோ! ஞானியரோ! யோகியரோ!




சமாதி கட்ட வேண்டும் என்றும், அச்சமாதி யில் தான், ஆலயம் அமைய வேண்டும், என்றும் வேத விதி இருக்கிறது. ஆகவே உன் சமாதியின் மேல், ஸ்ரீமத்திரி நாத் ஆலயம் பிரசித்தமானது!

ஸ்ரீ உத்தவர் :— என் பாபா! இந்த ஆலயத்தின் சிறப்பு என்ன? இதை எப்படி அறிய வேண்டும்?

வைகுண்டம் :— இதன் முக்தியம் இந்த பக்தன் பத்ரி யால், தோன்றிய தன்மையால் சுயம்புகள்

இந்த நிலையில், அம்மா & அப்பாவுக்கோ! அல்லது மாமா & மாமிக்கோ! பெரியவர்கள் என்ற நிலையில், சேவை செய்தால், இத்த பக்தியில், சௌபாக்கிய நிலை, பெறுவார்கள் என்றும், உத்தமமாகிய உன்னால் தோன்றியதால், நாவி க்கு, யோக ஸித்த மரு உத்கருக்கு சாக்ஷியத்தை, அருளும் என்றும், ஸ்ரீமஹான் தன்மயமாக அறிகிறோம்.




மைத்ரேயம்:— ஓ மஹாத்மா! மைத்ரேயரே! இந்த
உத்தவர், உமக்கு எந்த வகையில், அறிமுகம் ஆனார்?

மைத்ரேயர்:— ஓ பாபாஜி! துவாரகையில், கண்ணன்
துவாரகாதீசனாக, ஆட்சி செய்கையில், இந்த உத்தவர்
அவருடைய, பிரதிநிதியாக இருந்தார். யாமோ! வன
சஞ்சாரி! ஆனாலும், அடிக்கொருமுறை, துவாரகை
செல்வோம். எம் கண்ணனையும்! அவன் அண்ணா பல
ராமனையும்! தரிசிப்போம். அது சமயம், இரவு தங்கும்
சமயம், இந்த உத்தவர்! அரண்மனையில் தங்குவோம்.
அதன் பழக்கம்தான்.

மைத்ரேயம்:— எம் கண்ணன்! மறைவுக்குப்பின், தாங்கள்
உத்தவரை சந்தித்தது உண்டா?

மைத்ரேயர்:— ஆமாம் கடைசியாக, சந்தித்து,
நம் கண்ணன் விக்ரஹத்தை, வாங்கிக் கொண்டு, நம்
உத்தவர் ஹிமாலய அடிவாரம், ரிஷிகேஷ் வந்து
ஓரிருநாள், ஓர் குகையில் தங்கியிருந்தார் அது
சமயம், யானும் ரிஷிகேஷில், ஓர் குகையில் இருந்தேனா
அப்போது இருவரும், சிவ மஹான்களுடன், கலந்து
உரையாடினோம். அதுதான் கடைசிமுறையாகும்.



பைத்தியம்:— உங்கள் இருவர் சந்திப்பிலும், நிகழ்ந்தது என்ன?


மைத்ரேயர்:— நம் கண்ணன் மறைவுக்குப்பின், **கலிதோஷம்** எப்படி பீடிக்கும்; தர்மம் எப்படி மறையும்! இல்லை இல்லை! எப்படி மறைக்கப்படும், என்பதைப்பற்றி, விளக்கம் தெரிந்து கொண்டோம்.

பைத்தியம்:— அதுபற்றி, உங்கள் அறிவின், கணிப்பு சரியாக இருக்கிறதா?

மைத்ரேயர்:— ஓ மாமாஜீ! எங்கள் கணிப்பு எப்படி எப்படி இருந்தாலும்! உம் கணிப்பில், உருவான **கலியுக தர்மம்**! புஸ்தகம் அப்படியே ஸ்பஷ்டமாக இருக்கிறது!

பைத்தியம்:— அந்த புஸ்தகம், இங்கே வந்து விட்டதால் நீங்கள் அனைவரும், அந்த புஸ்தகமும் படித்து விட்டீர்களா?

மைத்ரேயர்:— இதுவே வேதங்கள் வியாபாரா! உங்கள் கலியுக தர்மம் புஸ்தகம் **ஏழு** உலகங்களிலும் இருக்கிறது.






அதைப்படிக்காத, பெரியவர்கள், இல்லையென்றே, சொல்வோம். ஆமாம் பாபாஜீ! அப்புஸ்தகத்தை, ஏன் கலியுக தர்மம் என, நாமம் கொடுத்தீர்கள்? அதை கலிதோஷம் என, நாமம் கொடுத்திருக்கலாமே?

மைத்ரேயி:- ஸ்ரீமஹான்கள், எக்காலத்திலும், ஏதோ ஒரு விஷயம், தோஷத்தை சுட்டிக்காட்டமாட்டார்கள். தர்மத்தையே, சுட்டிக்காட்டுவார்கள். அப்படியானால் தான், தர்மத்தின் பிரகாசத்தால், அதர்ம இருள், தானே மறையும். அதுதான் தர்மம்!

மைத்ரேயி:- ஓம் ஐயா பாபாவே! இந்த கலியுகத்திலே, உங்கள் மாபெரும் வேலை, தேவைப் படுகிறது. பணணணணணணணணணணி/ வேண்டியதாக கொண்டு, உங்கள் ஆசிர்வாதங்கள்.

ஸ்ரீயோகிஜெக்கோர் யோகி:- ஆமாம் தாய்/பாபா! இந்த ஹிமாலயாவில், எல்லோரிடமும், பரவலாக, பேசப்படுவது என்னவென்றால்:- குருபூஜை பண்ணுதல் ஓர் உத்தமமிடம், உண்டு என்றால், அதுவும் பாபாவே! என உங்கள், உண்மையை உணரும் முன்பு, சூர்யதாழ்த்தி பேசினீர்கள். யாவும் அப்படித்தான்,



141

ஓர் குருவுக்கு, பூஜை செய்யாதவன், எப்படி உத்தம மாணவனாவான், என் எண்ணமேயம் ஆவலில் அன்று கேட்டதில், நடந்த ஸத்ஸங்க உரையாடல்,

# யோக குருதக்ஷிணை

ஸ்ருஷ்டியிடம்! அமைதியாத, சரியான விளக்கம் கொடுத்து, 6 உலக ஞானிகளும், தலை வணங்கி ஏற்றுக் கொண்டனர்.


வைத்தியம்:- விட்டுப்போனது, அந்த ஒரு உலகம் எது? புரியவில்லையே?

ஸித்தர்:- அது உங்கள் பூலோகமாகிய இந்த உலகம் தன் காரணம், உங்களிப்பற்றி இன்னமே, எவரும் தெரிந்து கொள்ள வில்லையே என் செய்வோம்?

ஓர் யோகி:- தெரிந்து கொள்ள முடியாமல் போனதற்கு இந்த பாபாவேகாரணம் அல்ல வேறு எவரும் காரணம், இல்லை யெனச் சொல்லுவோம்?

ஸித்தர்:- அது எப்படி, இந்த பாபா காரணமாவார்?


ஓர் யோகி:- இவர் தம்மை, காட்டிக் கொள்ளவும் மாட்டார்! காட்டுபவர்களிடம், இவர் மறைத்தும் கொள்வார் மறைந்தும் கொள்வார்.



நாராயணன் :- ஏலம் மெய்யன்பர்களே! இக்கூத்து யானைபாபா! சொன்ன நிலையை, உணரும் போது?

(A) இக்கலியுக தர்ம நியதியின்படி, புறச் செயலும்! புற வழிபாடும்! அதனால் நாம் பெறும் நன்மை என்ற, **எதிர்பார்ப்பும்!** அந்த **குறுகிய** நிலையில், போட்டி! பொறாமை! பணம்! கௌரவம்! அந்தஸ்து புகழ்! பதவி! **அடுத்தவர் யார்???** என்ற, கேள்விக்குறியுடன் ஓர் வியாபாரம் நடைபெறுகிறது!

(B) இந்த ஏழையான பாபா! சொன்ன நிலையில் பார்த்தால்! **அகஉணர்வுடன்** உள்ள நெகிழ்வு! உள்குழைவு! உள்ள உருக்கம்! கண்ணீர் பெருக்கம்! குரு காட்டிய வழியில் நடக்க வேண்டும் என்ற **ஏக்கத் துடிப்புடன்!** ஸத்குரு வாக்கிய சிரத்தையே **ஸத்குருபூஜையும்** ஸத்குரு**சேவை**யும்




ஆகும் என, நான்கு யுகங்களிலும் முமுக்ஷுக்களுக்காக வாழ்ந்து, அனுபவித்துக் காண்பித்த, ஸ்ரீ மஹான்களின் அனுபவம் இருக்கிறது.

ஸ்ரீதர்:- ஹே பாபா ஜீ! பத்ரியை வைத்து, இத்தலம் பத்ரி நாத் என நாமம் பெற்றது என்பது, ஸத்யமே! ஆனால் உத்தவர் என்ற, மஹான் சமாதியால், தானே இந்த ஆலயம் எழும்பியது. அப்படியானால் இந்த உத்தவர் நாமமானவை, எதிலும் காணோமே, காரணம் என்ன?

வைத்யம்:- ஓ மஹாத்மா! பத்ரி ஒரு பக்தன். அவன் நாமாவில், ஆலயம் விளங்குகிறது, பரம் அன்பர்களுக்கு, ஒரு பிம்பம் (பக்தன் என்ற நிலையில்) உண்டாகும். பக்தி வளரும்! சேவையும் வளரும்! ஒழுக்கம் ஓங்கும். இம்பின்னறையே, கடந்த நிலையே! ஞானம் ஆகும். அதற்கு, எந்த பலனும், வேண்டாம். எந்த பலமும் வேண்டாம். பக்தி வைராக் கோத்ரம். ஞானம் உள் உணர்வாலே!

நாராயணன்:- குழந்தாய் பாபா! உன் இந்த பதிலை, சிரமேற் கொண்டு, ஆமோதிக்கிறேன். சற்று முன், உன் வாக்கில் ஒரு வார்த்தை வந்தது. அதாவது, 'புகுந்த வீடு சென்றவுடன், பிறந்த வீட்டை, மறப்பதானேன்'! என ஒரு வாக்கு வந்தது.




இது பொருத்தமானதாக, தெரியவில்லையே! ஏன் பிறந்த வீட்டை மறக்க வேண்டும்? அப்படி புகுந்த வீட்டில், என்ன பெருமை இருக்கிறது? ஸ்ரீமாதா / ஸ்ரீபிதா / ஸ்ரீகுரு! என முறையோடு, ஸ்ரீமஹான்கள் சொன்னாலும், குருவும், முடிந்து திரும்பவும், ஸ்ரீமாதா பிதாவிடம் தானே, அத்ருஷ்டத்தை வருகிறது? அங்கு அத்ருஷ்டத்தை, ஸ்ரீமாதா பிதாவை மறக்கவில்லையே? நீ கூறுவது சற்று முரணாக தோன்றுகிறதே! இதைச் சற்று விளக்குவாய் போம்?

வைராக்யம்:- ஜெயராம் பொருளோ! இது தாங்கள் அறியாததா? ஏன் இந்த கேள்வி? இதற்கு விடைதான் சரி, கூறிவிடலாமே?

நாராயணன்:- யாம் சொல்வதற்கும், நீ சொல்வதற்கும், வித்யாசம் உண்டு! **யாம்** தெய்வம் என்ற நிலையில், ஸ்ரீபகவான் நிலையில் **கர்த்தா!** ஆனால் **நீயோ ஸத்குரு** என்ற நிலையில், **அகர்த்தா** வாகும்.

வைராக்யம்:- இப்பேதம் இங்கு ஏன்? குரு வேறு! தெய்வம் வேறு! என்ற முரண்பாடான கருத்து ஏன்? வேண்டாம் பிரபோ வேண்டாம்! இந்த இடம் உங்களுக்கே உரியது! இங்கு உங்கள் வாக்கு,



145

வைத்தியமே! கிருபை செய்யுங்கள்! ப்ளீஸ்! ப்ளீஸ்!
ப்ளீஸ்! என கெஞ்சியது! அவ் வைத்தியம். உடனே
சபையே, பெரிய சிரிப்பால் குலுங்கியது. (எம்பிரபு
நாராயணன் கேட்டார்) ஓ ஞானியரே! ஆங்கிலமும்,
உன்னிடம் நடமாடுகிறதே?


கண்ணன்:- ஹே பிரபோ! இவன் சாமானியன் அல்ல!
உலகின் அனைத்து பாஷைகளும், இவனுக்குள்
அத்துப்படி (அனைத்தையும் அரைத்துக் குடித்தவன்)

வைத்தியம்:- ஹே பிரபோ! ஆனந்த ஸாகரா! அனந்தசயனா! இவனை
(கண்ணன்) உன்னுள் இருந்து, எமக்காகவே,
பிரித்துக் கொடுத்தாய் போலும்?

கண்ணன்:- நீமட்டும் என்ன வாதாம்? எமக்காகவே
அது தந்த ஒன்று! எம்மை என்னபாடுபடுத்துகிறது?

நாராயணன்:- எம் கண்ணன்! உன்னை என்ன செய்கிறான்
பாவம்? உறுதுணையாகத்தானே இருக்கிறான்?

வைத்தியம்:- ஹே கருணைக்கடலே! அனந்த சயனா!
பத்மநாபா! எமதய்யன் கண்ணனை யாம் குறை கூறவில்லை.




இருப்பில் **யாம் யாமாக** இருந்தாலும், இயக்கத்தில் **அவனின்றில்** யாம் இயங்க முடியாது என்பது ஸத்யமே! இப்போது பாருங்களேன்! பிரீஸ்! என்ற ஓர் ஆங்கில வார்த்தை கற்று வந்ததை, பெரிய பக்தி, அந்த பாதைக்கும், அதையும் 4 முறையென்.

<u>கண்ணன்</u> :- எம் பிரபுவே! இவன் நம்மாத்திரங்கள். யாத்திரை காலங்களில் கூட, எல்லா பாஷையும் இவனுக்கு தெரியும். ஆனால் அவைகளையும் தனக்குள் அடக்கிய நிலையால், இவன் **அடங்கி** இருப்பான். அங்கு எம்மைப்பற்றி ஐயமாக! அப்பப்பா!!

<u>நாராயணன்</u> :- ஹே குட்டிகண்ணா! இனி நீ சற்று பேசாமல் இரு. இவனிடம் ஓர் முக்கியமான, கேள்வியை கேட்டுக் கொண்டிருக்கிறேன். அதன் விடை இங்குள்ள அனைவர்க்கும் மிக மிக மிக மிக, முக்கியமானதாகவும். ஹே பாபா! எம் கேள்விக்கு, விடையளிக்க, பணிவுடன் வேண்டுகிறேன்?

<u>கண்ணன்</u> :- யாமும், இதை வெகுகாலமாக, எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம்? சொல்பாபா?

<u>வைத்தியம்</u> :- இப்போது வந்த சலசலப்பால் தாங்கள் கேள்வி மறந்து விட்டது. அக்கேள்வியை மீண்டும் ஒருமுறை, கூறுங்கள் பாபா போதும்?




147

நாராயணன்:— (A) ஏன் பிறந்த வீட்டை மறக்க வேண்டும்? (B) அப்படி புகுந்த வீட்டில் என்ன பெருமை இருக்கிறது? (C) குருவிடம், குருகுலம் செல்லும் மாணவன், இருப்பினும் தம் மாதா பிதாவிடம் தானே வருகிறான்? அதாவது புகுந்த இடம் சென்றாலும், திரும்பவும் பிறந்த இடம் தானே வருகிறான்? (D) அக்குழந்தை, ஸ்ரீமஹாபிதாவை மறக்கவில்லையே இதுதான் என் கேள்வி? பதிலும் முறையாகவும், எளிமையாகவும், இனிமையாகவும் இருக்கவேண்டும்!

வைத்தியம்:— ஓம் ஸத்குருநாதா! ஸாந்தஸ்வரூபா! ஸத்யசொரூபா! ஸின்மய சொரூபா! பராத்பரா! உம் கை கருவியாகிய, நான் பதுமை இயங்க! அதன் தை! பேறுவரைய! அதை ஏற்றுணவேண்டும் என் பிரபோ! (A) ஏன் பிறந்த வீட்டை மறக்கவேண்டும்?

பதில்:— பிறந்த வீடு என்பது, **வீணை** சம்பந்த ஸ்தாவம், வந்த இடமும், அது வளர்ந்த இடமும் ஆகும். அது சமயம், அவ்வீட்டுக்கு உரிய, தந்தை காவிக ஸ்ரீமாதா ஸ்ரீபிதாவுமே! அந்த **தனகண** தெய்வமாகும். அக்குழந்தை அவள் ஸ்ரீமாதா ஸ்ரீபிதா கருணையினால், வளர்ந்து **பருவம்** ஆகிறாள்.



பின் அக்குழந்தை **தாய்** வீட்டில், இருப்பது பொருந்தாது. ஓர் நல்ல கணவனைப் பார்த்து **ஸத்குரு**விடம் ஒப்படைக்க வேண்டியது, அந்த ஸ்ரீமாதா ஸ்ரீ பிதாவின் கடமையாகும். அக்குழந்தையை, அப்படி ஒருவனிடம் கைபிடித்து கொடுக்கா விட்டால் "வாழும் பிள்ளையை தாயே கெடுத்து விட்டாள்" என உலகம் சொல்லும். அப்படி அக்குழந்தை போகாவிட்டால் அக்குழந்தையின் பெயரே மாறிவிடும். அதாவது **வாழாவெட்டி** (வாழவிடாமல் தன் வாழ்வை, வெட்டி முறித்துக்கொண்டவள்) எனப் பொருள்படும்.

ஸ்ரீமாதா ஸ்ரீ பிதாவிடம், அக்குழந்தை இருக்கும் போது அது சொந்த, பந்த, பாச, லௌகீகம் ஆகும். அக்குழந்தை ஒருவனிடம் (ஸத்குருவிடம்) ஒப்படைத்து விட்டால் (கொடுத்து விட்டால்) அக்குழந்தையின் **நன்மை தீமை** (அறிவின் தெய்வீகமும்! பேரறிவின் பரமார்த்திகமும்) எல்லாம் அவள் கணவன் (ஸத்குரு) பொறுப்பேயாகும். இதன் உண்மை என்றுமுள்



(149)

இப்பிறவியில் எமக்கு வாய்த்த தாய் தந்தை யாகிய, நீங்கள் இருவரும், ஸத்தானவர்களோ எனச் சொன்னது! உங்கள் ஸன்மார்க்க பாதையில், குறுக்கே நிற்காமலும்! தடை செய்யாமலும்! அனுகூலமா இருப்பவர்களாகும் என உணர்க்கவும்! எமக்கு

# புகுந்தவீடு (ஸத்குருவிடம்)

போனபின்! **பிறந்தவீட்டை!**

அதாவது, சொந்த பந்த பாச, உணர்ச்சிகளிலிருந்து, வெளிக்கிளத்தை, மறந்தே ஆக வேண்டும். அப்படி மறக்க விடியாமல், முன் சொன்ன நிலையில், அக்குழந்தை, வாழா வெட்டியே! தாய்வீட்டிலிருந்து, அமைதியுடன் சென்றுவிட்டால், அக்குழந்தையை! வாழவிடாமல் தாய் கெடுத்துவிட்டாள்! என்ற பழியை, அடைக்க நேரிடும். இதற்கு **தாய்கள்** தயாரா?

கேள்வி:— (B) அப்படி புகுந்த வீட்டில், என்ன பெருமை இருக்கிறது?

பதில்:— எம் பிரபுவே! தெரிந்தோ! தெரியாமலோ! கோடானு கோடி, ஜன்மா எடுத்துவிட்டோம்! அதில் கோடானு கோடி, மாதா பிதாவையும், பார்த்துப் பார்த்து, **அலுத்துப்** போனோம். இப்பிறவியில், எமக்கு வாய்த்த, தற்காலிக தாய் தந்தையாகிய, நீங்கள் இருவரும்!





உ


ஸத்தானவர்களே! ஆகவே நம்ஸ கணவனு (ஸத்குருநாதனின்) பார்த்து, எம் ஸமஒயம் ஸைட்டு விட்டோர்கள். ஆகவே இனி, உங்கள் குருமாறுயும், எம் ஸ்ரீ ஸத்குரு (கணவன்) பரிபூரண, கிருபா கடாக்ஷத்தையும், இனி திரும்ப இவ்வுலகுக்கு, கண்டிப்பாக, வரமாட்டோம். (ஜீவன் முக்தி பெற்றுவிட்டோம்.)

உங்களுக்கும்! கவலை பயம் வேண்டாம்.

எமக்கும்! சந்தேக கலக்க பயம் இல்லை. என்பதே ஸத்தியமானது.


இதுவே புகுந்த வீட்டின், பெருமையானது.

உ கேள்வி:— குருவிடம், குருகுலம் செல்லும், மாணவன்! திரும்ப வந்ததும், ஸ்ரீ மாதா! ஸ்ரீ பிதாவிடம் தானே வருகிறான்? (புகுந்த இடம் சென்றதும், திரும்ப வந்து, பிறந்த இடம் வருகிறானே? அந்த ஸ்ரீ மாதா / ஸ்ரீ பிதாவை / மறக்க வில்லையே?)



151

பதில்:— இது ஸாமான்ய குருவும்
உலகியல் கல்விகளாகிய 18 வித்தைகளும் ஆகும்! இது
தன்னை அறியும், அறிவாகிய ஆத்மஞானம்
இல்லவே இல்லை என்பதே சத்தியம்.
இங்கு ஸ்ரீமாதா/ஸ்ரீ பிதாவும்/சரி இல்லை! குருவும் சரியில்லை.
இங்கு ஸ்ரீ மாதா/ஸ்ரீ பிதா/சரி இல்லாமை சொல்வது,
அவ்விருவரும் அஞ்ஞான! மாந்தராவர்!
அதாவது, தவனக்குறைவால், பீடிக்கப்பட்ட தன்மை
யினாலும்! அத்தேத்தையும், தீவ புண்ணிய மிக்க மோக்ஷ
சிரத்தை! இல்லாத்தன்மையாலும், அங்கு
வாய்க்கும், தனையனும்/ (குருவும்) சொந்த பந்த
பாசம், பிணைப்பை விடாமல், (அஹங்கார மமகாரம்
விடாமல்) சாமான்ய குருவாக, இருப்பதனாலும்,
புகுந்த வீடு போனாலும், (குருகுலம் போனாலும்) பிறந்த
வீட்டிலிருந்து, (ஜனனமரணத்திலிருந்து) வந்தே ஆக
வேண்டும் என்று ஸ்ரீ மஹான்கள்/ வாயிலாக அறிகிறோம்.



(152)

இதுவே **பிறந்த** வீடு! **புகுந்த** வீடு!
அதன் **போக்குவரவினை!**


வ்ருந்தாவனம்

நாராயணன்:— ஹே ஆத்ம ஞான பாபா ஜீ! இப்போ உனது வாயால், கேட்க, உண்மை எப்படி **அனுபவ** நிலையில் வருகிறது கவனித்தாயா?

எம்மைச் சொல்லச் சொன்னாயே! யாம் சொன்னோம், இத்தனை தெளிவு! இத்தனை இனிமை! இத்தனை எளிமை! இருக்குமோ? ஸத்குருநாதன்!!!!!!!!!!!!
ஸ்ரீபகவான்! பகவான்தான்!!!!!!!!!!

சைதன்யம்:— ஹே பிரபோ! ஹே தயாநிதி! இது என்ன வேடிக்கை! பேசியது நீயே! அதன் பொருளும் நீயே! அந்த ஒலி உன்னுடையதே! இது ஒரு ஸித்திக்கப்பட்டதோ? ஸித்தர்களுக்கு, என்ன பெருமை இருக்கிறது?

நாராயணன்:— அதை இப்படி பார்ப்போம் பாபா! ஒலி அலைகள், சர்வ வியாபகமாக, எல்லா இடத்திலும், இருந்தாலும் அதை ஸ்பஷ்டமாக,




துல்லியமாக! அனைவர்க்கும் அனுபவ நிலையாக! ஒலிபரப்புவது! **ஸ்பீக்கர்** தானே?

ஸ்பீக்கர் இல்லாமல், ஒலி அலைகள் இருந்து, என்ன பிரயோஜனம்?

வைத்தியம் :— ஹே தயா ஸிந்து! கருணாகரா! ஸத்ய ஸ்வரூபமே! **எல்லாம் நீயே!**

நாராயணன் :— ஓம் அருமை பாபாவே! இதுவே திரிலோகத்தின்! திவ்யாஸ்திரம் ஆகும்! பாசுபதாஸ்திரம்! நாராயணாஸ்திரம்! பிரம்மாஸ்திரம் இதுக்கு மிஞ்சிய, அஸ்திரமும் இல்லை! இதை மிஞ்சிய மந்திரமும் இல்லை. எல்லாம் இந்த ஒன்றிலேயே, அடங்கி விடுகிறது.


வைத்தியம் :— எல்லாம் நீயே! என்பதும், எல்லாம் உன்னால்! என்பதும், எல்லாம் உனக்கே! என்பதும், **ஸர்வார்ப்பண நிலையில்!** அமைந்து விடுவதால், ஓர் ஆத்மசாதகனுக்கு வேறு எந்த பயிற்சியும்! எந்த முயற்சியும்! தேவை இல்லை என்பதே, அனுபவ ஞானிகளின் கருத்தாகும்.



பக்தி பண்ணி முதிர்ச்சி
அறுவும் நான்! என
னை (154)
வாக்கால் அவமானமல்
இருந்தாலும், நாமரூபகாட்சியில்
குற்றம் குறை! பேத உணர்வு!
விருப்பு வெறுப்பு! தோற்றமாகில்
நான் எனது என்ற வேர்துகள்
கள் அடி ஆழத்தில் இருக்கிறது
என பொருள் கொள்ளல் வேண்டும். முன்னசான்ன சரிவா
ஈம்பனம் முழுமையாகும் மேலே கூறிய முறையும் இருக்கவியலாது.
இருக்க முடியாது. இது ஸத்தியம்.

ஸ்ரீ உத்தவர்:- ஹே தாரியமா! பணிவே பாதையாக
கொண்ட பரமாவே! ஓர் சிறிய கேள்வி? அதாவது,
யாம் யோகம், பயிற்சி பண்ணியதால் நான்! என்றவ்!
என்ற அஹங்கார, அதிகார, ஆதிக்கம் இருந்தது!
ஸத்தியமே! ஆறுயும் யாம்! கோபம் சென்று,
கோபிகைகளிடம், பரிபூரணசரணாகதியை, உணர்ந்து
அனுபவித்து, யோகத்தை விடுத்து, ஓர் பக்தன்
ஆகிவிட்டோம். அதன் பின்னரே, பண்டரியில்
நாமதேவராக! தோன்றினோம். அதுசமயம், யாம்
ஸ்ரீபகவானிடம் ஓர் குழந்தையாக, 42 ஆண்டுகள்
சேவையும் செய்தோம். அத்தியாயம், எம் அஹங்
காரம்! அழியாத காரணம் என்ன?

வைத்தியம்:- ஓ மஹானுபாவா! இந்த அஹங்கார, மமகாரம்!
சாமான்யப்பட்டதல்ல! எனமட்டும், உறுதியாக உரைப்பம்.
உம் நாமதேவர் வரலாற்றில் இது முக்கியம் ஆகும்.
ஸ்ரீபகவான் ஆணையின்படி, ஸ்ரீ கோராகும்பர்! ஓர் தடி
கொண்டு, எல்லா அன்பர்களையும்! மண்பாண்டத்தை, தட்டி
பார்ப்பது போல், ஒவ்வொருவர் தலையிலும், ஓர் அடி
அடித்துக்கொண்டே வந்தார். அனைவரும் கேட்க சக்தி
(உணர்ச்சி) அற்புதமானமாக ஏற்றுக் கொண்டனர்.



155

நாமதேவர் நிகழ்ச்சி
யில், நாம் குற்றம்
செய்யாதவர் என்றும்.
மற்றும் அனைவரும் குற்றம்
செய்தவர்கள் என்றும்.
நான் நல்லவன் என்ற
பாவனையால், அனைத்து ஜீ
வன்களுக்கும், தண்டனை அளிக்கி
திரு. நாமதேவர். இது அஹங்காரத்
ஆக்கிக் கொள் இன்/அறியாமையாலும்.

உண்மை அடிக்க வரும் போது! உனக்கு எப்படி
வந்தது என்றால்?

**நான்** என்ன தவறு செய்தேன்?


**என்னை** அடிக்க வேண்டும்?

இதன் உட்கருத்து!

அவர்கள் அனைவரும், தவறு செய்திருக்கிறார்கள். ஆகவே,
அவர்கள், தண்டனை அனுபவிக்கிறார்கள்.
நான் தவறு செய்யாதவன், ஏன் தண்டனையை, அனுபவிக்க
வேண்டும்? என ஒரு கேள்வி எழுந்தது.

இதனால் உன் கவனம் **முற்கவனசக்தி**யால்!
பின்னவிட்டுக் கொண்டது.

உடம்பு நான்/ எனது! என்னால்! என பாராட்டிக் கொண்டதால்,
**தற்கவனசக்தி** அதை மடக்கப் பார்க்கிறது.
**என்ன! நான்!** பாதுகாத்துக் கொள்வேன்!
என்ற **தற்காப்பு சக்தி**யே மேலோங்கிவிட்டது



இதன் காரணம் :— என்னதான், **பக்தி** மேலோங்கி இருந்தாலும், **நான்/எனது**/ என்ற அறியாமை காரணமாக, மேலோட்டமாகத்தான் அறியும். அதுவும் அதீதமாக அறியாது. அதன் வேர்த்துகள்கள் உள்ளத்தின் அடி ஆழத்தில், பதுங்கி இருக்கத்தான் செய்யும். அந்த வேர்த்துகள்கள்/ எப்படி அறியும் என்றால்?

**ஸத்குரு** கிருபையால், **ஞானம்!** பிரகாசிக்கும் போது, எல்லாம் **மண்ணாக!** மாறும்நிலை, அவசியம் வந்தே தீரும். எல்லாம் மண்ணாக உணரும் போதுதான், ஆசையும் & தேவையும்/ அவசியம் நாசமாகும். அதனால் **உடைமையும்!** **உரிமையும்!** நாசமாகும். அந்நிலையில் தான் குற்றம் குறை/ பேதபாவனை/ விருப்பு வெறுப்பு/ ஆகிய இம் மூன்றும் நாசமாகும். இம் மூன்றும், நாசமானபின்பு, நான்/ என்ற/ எனது/ உள்ளே பதுங்கி இருப்பது, ஸத்தியமே!



வினை எம்மை விடவில்லையா? (57)

யாம் வினையை விட வில்லையா? என கவனித்தோம்.

நான் என்பதை யாம் முழுமையாக விடவில்லை! ஆகவே வினை! எம்மை விடவில்லை என, உணர்ந்தோம்.

நான் என்பதை யாம், முழுமையாக விட்டோம். வினையும் எம்மை விட்டொழிந்துவிட்டது.


# வினையை விடா நாயேன்!

என ஓர் அடியாரின் கருத்து, எதை உணர்த்துகிறது என்றால்? நான்! வினையை! விடுவதில்லை. வினை! புண்ணிய பாபம் இரண்டும் நான் என்பதை விடுவதில்லை.

தேவையும் ஆசையும்! எப்படி ஒன்றை விட்டால் ஒன்றில்லையோ! அதைப்போல?

வினையும் நானும்! ஒன்றை ஒன்று, விடுவதில்லை. அப்படி விட்டால், இரண்டும் நாசமாகும். இவ்விரண்டும் இருந்து இருந்தால், ஓர் ஜீவனை நாசம் செய்யும். இவ்விரண்டும் நாசமானால், அவன் ஜீவாத்மாவும் இல்லை! ஜீவனும் இல்லை. அவனே **ஆத்மா!** ஆத்மாவே **அவன்** என, அந்த பிறவியே ஆகிவிடுகிறான்.

எம் அன்பான உத்தம பக்தர்களே! இதை கவனிக்கவும். பாரதப் போர் ஆரம்பிக்கும் முன்னர், எம் கண்ணன்! காண்டீபனுக்கு, **கீதா உபதேசம்!** செய்தான் என்பது, அனைவரும் அறிந்ததே!



கீதா உபதேசம், கேட்டகாண்டீபன்! அந்த உபதேச
கருத்தை **லேசாக** மறக்கலானான்!
அக்கருத்தை, போரை அறப்போராகவும்! ஆனந்த
மாகவும்! பாரதப்போர் லீலாமயமும் செய்தான்.
அப்போரில், ஒருநாள், காண்டீபனின் அன்பு மகன்!
அபிமன்யு! உயிர்துறக்கிறான்; **விதி** வசத்தால்.

மகனிறந்ததை, காணும் போது, காண்டீபன்! காண்டீப
கையில்! **மோகத்தை** மாறி விரு
திருகிறான். துடிக்கிறான்! துவள்கிறான்! துக்கிக்கிறான். அந்த
சொந்த, பந்த, பாச! **துக்கத்தில்** தன்னை இழந்தான்!
கண்ணனையும் மறந்தான். கண்ணனே! கண்டபடி திட்டித்
தீர்த்துவிட்டான். இந்த இவ்வாக்காரணம் என்ன?

# உடைமை உரிமை!!!!!

என்னுடைய மகன்! என் மகனை விடமாட்டேன்!
யார் இருந்தாலும் கவலையில்லை! என் மகன் இறக்கக்கூடாது!
என் மகன் எனக்கு வேண்டும்! என் மகன் இல்லாமல் நான்
உயிரோடு இருக்க மாட்டேன்! நான் அக்னிப்பிரவேசம் செய்வேன்.



(159)

# உ


என்ற **உடல்/ உடைமை/ உணர்ச்சிக்கு/** அடிமையான தன்மையால் **நாம் யார்?** என்ற

மெய் உணர்வை இழந்தான்.

காரணம்:— நாமரூப, ஜகஜீவ, பொருள், உறவு சுற்றம் நட்பு/ இவை அனைத்தும், மனிதனை என உணரத் தன்மையும்.

இவை அனைத்தும் திட்டமிட்டு/ திட்டமிட்டபடி, மாறுபாடு கோளாறில்லாமல், விகிதாசாரப்படி, ஒழுங்காக இயங்குகின்றன. அவ்வியக்கம்/ பெருக்காதவும், கரைந்து இருப்பதில்லை என உணரத்தன்மையும்.

அச்சக்தியை/ மாற்றிடவோ/ மறுக்கவோ/ தடுக்கவோ/ நிறுத்திடவோ/ மேலும் மேலும்/ **விபரீத நாசம்தான்/** உண்டாக மேலன்றி, சாந்தி சமாதானம், திருப்தியின் ஆனந்தம்/ உண்டாகவே உண்டாகாது என **ஸத்குரு**வால் உணரத்தன்மையாகும்.






என எம் உத்தவதாஸருக்கு, உணர்த்தப் பட்டது.

ஓர் யோகி:- ஹே அன்பான பாபாவே, ஓர் வேண்டுகோள், இக்கேள்வியானது, இங்கு ஹிமாலயாவில், உள்ள, அனைத்து அன்பர்களுக்கும், நம்முடைய, அன்பர்களுக்கும், பயன் உள்ளதாகும். இது பல மடல்களில் பல விதத்திலும், உணர்த்தப்பட்டதுதான். ஆனாலும்? 'தனித்தனியே' கூறப்பட்டதாக தெரியவில்லை. ஆகவே இதைக் கேட்கிறேன். அதாவது?

**உடல், உடைமை, உரிமை, உணர்ச்சிகள், உணர்வு,**

ஆகிய இந்த ஐந்திற்கும், தனித்தனியே, விளக்கம் தேவை? அவை எப்படி, ஒன்றுடன் ஒன்று, பிணைவில் இருக்கிறது? அப்பிணைவை, எவ்விதமாக பிரித்து, எப்படி நாசம் செய்வது? என்பது பற்றி, சுருக்கமாகவும், எளிமையாகவும், இனிமையாகவும், தரவேணுமென்று, பணிவுடன் இந்த ஹிமாலயா அன்பர்கள் சார்பில், வேண்டிக்கொள்கிறேன்?



161

**நாராயணன்** :- ஹே ஆனந்தமானபாபாவே! இது நல்ல கேள்வியே? இங்கு நடந்த ஸத்ஸங்களின்,

**உயிரோட்டமான!**

கேள்விதான் இது? இந்த பதிலுடன், இந்த ஸத்ஸங்கத்தை நிறைவு செய்கிறேன். என முடித்துக் கொண்டார்!

**சைதன்யம்** :- எம் அன்பான பக்தர்களே! இதன் விளக்கம், பல மடங்களிலும்! பல இடங்களில்! வாக்கு வடிவிலும், கொடுத்திருக்கிறேன். இருப்பினும், இந்த இடம், மிகமிக முக்கியம். ஆகவே, உங்கள் கேள்விக்கு, இனி விடையை கவனிக்கவும்!

கேட்பதில்! **சிரத்தையும்!** கேட்டதில்!

**நம்பிக்கையும்!** உங்கள் அனுபவத்தில்!

**வைராக்யமும்!** அவசியம் தேவை.

**இறை குரு!** உணர்விருந்தால்,

அவசியம் அனைவர்க்கும் முடியும். இது ஸத்தியம்!



(162)

(A) **உடல்** :— இது பஞ்சீகிருதம் மண்ணைப்பட்டதாகும். இது பஞ்சபூதங்களால் ஆனதாகும். இது மண்ணும் ஜலமுமே/முக்கியம் ஆகும். இது இச் **ஜீவாத்மா** வசிக்கும், ஓர் வீடு ஆகும். இது புண்ணிய பாபம் என்னும், இரு **வினையால்** பிணைந்து இணைந்த ஒன்றாகும். இப்புண்ணிய பாப வினையானது, நான், என்னால், என்னுடையது, என்ற, அஹங்காரம், அதிகாரம், ஆதிக்கம், அபிமானம், இவைகளால் தான், உண்டாகிறதே தவிர, யதேஷ்டையாக உண்டானதில்லை. இவ்வுடல்களில் ஆண், பெண், மற்றும், அனேக பேதங்களும் **மாயை** கற்பனையாகும். அது உண்மையல்ல. இவ்வுடல் மண்ணில் விழுந்தது திரும்பவும், எழாமல் இருக்க வேண்டுமானால். நான், என்னால், எனது, ஒழிந்து ஓர் நாமரூப பரிபக்குவாளிடம், எல்லாம் நீயே, எல்லாம் உனதே, என சரணாகதி பண்ணும் ஆண், ஸ்ரீ ஸத்குரு அருள் பிரம்மானந்த பண்ணைக்காரரிடம் உடல் **நசுக்கும்** திரும்ப எழாது. இதுவே ஜீவன் முக்தி என்று மஹான்கள் சொல்வார்கள்.



ஓர் உண்மை:— (163)

ஒருவரிடம் ஓர் பொருளை எடுத்து, அதை இறைவனிடம்; எல்லாம் நீயே! எனக்கொடுத்தால் அது திருட்டு ஆகாது. அது தர்மம் ஆகும். ஒருவரிடம் ஒரு பொருளை எடுத்து அவரிடம் கொடுக்கும் போது அப் பொருளில் அனுப்பிரமாணம் உணர்ந்து தொடரும்.

# (B) உடைமை:— நாமரூப

ஜீவ தோற்றங்களும், மனித வர்க்கத்தில், ஸ்ரீமாதா, ஸ்ரீபிதா, மற்றும் குழந்தைகள், உறவு, சுற்றம், நட்பு, வகைகளும், மற்றும் அனைத்து பொருள்களும், முன் கூறிய நியதியால், **வினை**யின்படி, **விதி கால** தேவன், அவரவர்க்கு திட்டமிட்டபடி, திட்டமிட்ட காரியங்களும், காரிய வஸ்துக்களையும், விகிதாசாரப்படி, பாரபக்ஷ தோஷம் இல்லாமல் **அன்பின் அரவணைப்பில்** கொடுத்துக் கொண்டிருக்கிறான், என்பதே ஸத்யம்.

**ஆனால்?**

மனம் படைத்த (மனதிற்கு அடிமையான) இந்த **மனிதன்**, மட்டும், முன் கூறிய நியதியால், அஹங்கார, ஆதிக்க, அதிகார, அபிமான **வெறி**யால், உந்தப்பட்டு, தேவைகளையும் & ஆசைகளையும், பெருக்கிக் கொண்டு, நானே வேண்டும் என்ற, **பேராசையால்**, உந்தப்பட்டு,



வைத்துக் கொண்டாலும் அது திருட்டு ஆகும். (164)
மேலும் தேவைக்கு மேல் வைத்திருப்பவன் திருடன் ஆகும். தர்மப்படி பார்க்கும் போது. சேமிப்பே பாபம் ஆகும். தேவைக்கு மேல் இருக்கும் போது அவன் ஸ்ரீ பகவானை மறந்து விடுகிறான். தேவை ஏற்படும் போதுதான் அவன் ஸ்ரீ பகவானை நினைக்கிறான். முடிந்தது.

**சேமிப்பால்** சேகரித்துக் கொள்வதும், என்னுடையது! இதை உனக்குத் தர மாட்டேன்! என்று **போகத்தால்** சேர்த்து வைப்பதும், உடைமை ஆகும். அவனே கொள்ளையடிப்பவனும்! திருடனுமாக ஆகிறான்.


**உரிமை:-** முன் கூறிய நிலையால், உடைமை கொண்டாடுவதும்! விரோதம்! குரோதம்! வஞ்சகம்! சூழ்ச்சி! போட்டி! பொறாமையால்! இது **என்னுடையது** என **வக்ரம்** (பிடிவாத கோட்பாடுகளை) உரிமை என்றும், அதன் நிலையால், உரிமை போராட்டம் என்றும், ஆதிக்க அதிகார வெறியை உடையது, உரிமை! ஆகும். இந்த உடைமையும்! உரிமையும்! ஒன்றோடு ஒன்று, பின்னிப் பிணைக்கப்பட்டதாகும். இவை இரண்டும், நாசம் அடைய வேண்டுமானால், சேமிப்பை **குறைக்கலாம்** பின், அனுபவத்தில் **நிறுத்தலாம்!** ஏன் இதை, வலியுறுத்திக் கூறுகிறேன் என்றால்? (இது மிக மிக மிக மிக கடினமே)






நாளைய சேமிப்பு, நமக்கு தயார் நிலையில் இருக்கும்
போது/ வேண்டும் என்ற, தேவை இருக்க முடியாது. வேண்டும்
என்ற, தேவை இருக்க இயலாது. தேவை ஏற்படும் போது
தான்/ நம் **மனம்/ ஸ்ரீபகவானை** தேடும்.

ஸ்ரீபகவானைத் தேடி, அவன் நாமாவளி, பெயரும் நாமரூப
பொருள் எதுவானாலும், தோஷங்களும் சேராது. வினையும்!
வந்த வினை மட்டும் முடியும்! வேறு எந்த சொந்த (பந்த) வினையும்!
தொடராது. அதை விடுத்து/ இக்கலி தோஷப்படி **நான்**
வேண்டுமே என்றும்? **நான்** என் செய்வோம் என்றும்?
ஆசாபாச, பழக்க வழக்கங்களில் சிக்கி, சேமிக்கால்,
(A) ஸ்ரீபகவானை மறக்க நேரிடும். (B) வினை தொடரவும் மார்க்கம்
உண்டு. (C) அங்கு உன் சர்வார்ப்பணமும் கை கொடுக்காது.
மேலும் ஓர் உண்மை, என்னவென்றால் இக் **கலி** தோஷமானது
**உடைமை & உரிமை** யால்!
பின்னப் பட்டதாகும். இவ்விரண்டையும் நாசம்
செய்வது சேமிப்பை விரும்பாதது! இருப்பதையும், இடைப்
பட்டதையும்/ நடப்பதையும்/ நவமே என ஏற்பதாகும்.
இதனால் சர்வார்ப்பணம் நிறைவு பெறும். ஆனந்தமும்
உன் வாழ்வமைய அமைதி இயல்பாக உண்டாகும்.



D) **உணர்ச்சிகள் :**— உணர்ச்சிகள் என்றவே, **ஆர்ப்பாட்டம்** எனப் பொருள்படும். ஆர்ப்பாட்டம் என்றால், கண்கள், காதுகள், வாக்கு, இம்மூன்றின் ஓவம், நடைபெறும் **எழுச்சிகள்!**

ஆகும் என, ஸ்ரீமஹான்கள் சொல்வர். உதாரணமாக :—
ஓர் நிகழ்ச்சியை, கண்ணால் காணும் நிலையில், அதை வகுக்கப்பட்ட ஒன்று, ஸ்ரீ பகவான் கருணையால், நடைபெறுகிறது என்று உணராமல், நாமரூப பொருள் மேல் உறக்கத்தாலும், உறவு, சுற்றம், நட்பின், வேகத்தாலும், முன் கூறிய, உடைமை & உரிமையால், உந்தப்பட்டு, **கோப ஆவேசம்** (கோபாவேசம்) கொள்வதும், ஓர் வார்த்தையை, எந்த ஜீவர்கள் மூலமாக கேட்டாலும், நன்று பொறுமையுடன், அவ்வார்த்தைக்கு, ஓர் நலமான தீர்வு காணாமல், ஆத்திர அவசரத்துடன் தவறான கருத்தினை பண்ணி, சோக, மோஹ, கலக்க பயம் கொண்டு, **விரோத & துரோகம்** கொண்டு, அம் மயக்கத்தினால், அயர்வு, சோர்வு, கொள்ளுதலும், மேலே கூறிய, இவ்விரண்டினாலும் சுகமான, ஆனந்தமான முடிவு எடுக்க முடியாமல், **வாக்கை** கண்டபடி ஓடவிட்டு, என்ன பேசுகிறோம்? யாரிடம் பேசுகிறோம்?




எதைப்பற்றி பேசுகிறோம்? எதற்காகப் பேசுகிறோம்? என்ற விவஸ்தை இல்லாமல், புலியில் சிறியதானியம் போல், வாக்கை உதறவிட்டு விட்டு, அக்காலங்களில் ஏற்படும் கண்ணெரிச்சல்! மூக்கு அடைப்பு! உதடு துடிப்பு! மூச்சுத்திணறல், உடல் கொதிப்பு! கைகால் நடுக்கம்! படபட படபட! வென ஓர் ஆட்டமே! உடலின் உணர்ச்சிகள் ஆகும். காரியம் கெட்டு, கட்டமன்று கிழிந்தபின், நல்லது கெட்டது தெரியும்! என்ற நிலையே, உணர்ச்சிகள் ஆகும்.

**உணர்ச்சி** மேலோங்கும்போது **உணர்வு** கெடாமல், மறைந்து கொள்ளும். (அதுசமயம் வெளிப்படாது)

**உணர்வு** மேலோங்கும் போது, **உணர்ச்சிகள்** கெட்டு, நாசம் அடையும்.

**E உணர்வு**:- நாமரூப ஜகத்தை, உடைமையும், உரிமையும்! கொண்டாடாமல், எல்லாம் ஸ்ரீபகவானே எனவும்! ஸ்ரீபகவான் செயலே என/நாம் அடங்கும் போது, உணர்வு மேலோங்கும்.

உறவு, சுற்றம், நட்பு, இவைகளிடம், பிரிய வாஸனை கெட்டு, எல்லாம் நன்மையே என்ற, அன்பு மேலிடும் போது, உணர்வு மேலோங்கும்.



**கலிதோஷ** கோர குணங்கள் நாசமாகி, ஸத்வ குணம் மேலோங்கும் போது, உணர்வு மேலோங்கும். குற்றம் குறை! பேத உணர்வு! விருப்பு வெறுப்பு! தோன்றாமல் இருந்தால், உணர்வு மேலோங்கும்.

சர்வாத்ம ஞானநிலையில், மனம் அனுபவம் பெறும் போது, உணர்வு மேலோங்கும்.

பிரம்மாத்ம ஞானநிலையில், மனம் அறிவாகவும், பின் பேரறிவாகவும், மேலோங்கும் போது, அவ் **பூர்ணம்** மஹத்கார நிலையில் **பிரம்மானந்தம் நாம்** என ஆவோம். போதமாகவும், முழுமையாகவும்! சொல்வது என்றால், இக்கலியில், வேறு எந்த சாதனையும் பண்ணாமல், **யோகம்** வேண்டாம் **தியாகம்** வேண்டும்

எதையும் கேட்காமல், எல்லாம் அவனே என, விட்டுவிட்டால் அவசியம் **அவன் பார்த்துப்பான்!**

உன் கடன் என்னை தாங்குவது. என் கடன் பணி செய்வது ஆகும்.

**பணியில் பணிவு** வேண்டும்.

பணிவு என்பது நான்! எனது! என்ற அஹங்காரமும், மமகாரமும், முழுமையாக அழிந்திருக்க வேண்டும்.



குற்றம் குறை! (169)
பேத உணர்வு!
விருப்பு! வெறுப்பு!
இம்மூன்றும் உள்ளவரை,
நான்! எனது! என்ற,
அஹங்கார! மமகாரம்!
அழிய வில்லை, என்பது ஸத்யமே!

இந்த நான்! எனது! முழுமையாக, அழிந்து போனாலும், அதன் வேர்துகள்கள், இல்லாத நிலை என்பது!

**நாமரூப!** ஜகஜீவ, அனந்த தோற்ற இருப்பிலும்! இயக்கத்திலும்! மறைவிலும்! **குற்றம் குறை! பேத உணர்வு! விருப்பு வெறுப்பு!** ஆகிய இம்மூன்றும், அனுபவமான ஒன்றே, தோற்றமே! எல்லாம் **மண்ணே!** மண்ணாகிய **பரமே!** பரமாகிய **நாமே!** நாமே எல்லாம்! எல்லாம் நாமே! என்ற **அகண்ட பரபாவனையோடு** இருக்க வேணுமென்று, உங்கள் அனைவரின் திருவடிகளிலும், பணிந்து வேண்டிக்கொண்டு, இவ்வுரையாடல் நிறைவு செய்கிறேன். நம் அனைவருடைய **ஸத்ஸங்கமும்!** இத்துடன் நிறைவு பெறுகிறது.

எல்லாம் ஒன்றே! அதுசிவமே!
அதுயாமே! யாமே அது!
அதுவே நீங்கள்! இது ஸத்யம்! ஸத்யம்! ஸத்யம்!!!


**பாபா.**



உ

ஓம் ஆத்மானந்த குழந்தைகளே!

இம் ஸ்ரீயாத்திரையின் போது, நீங்கள், அறிந்து தரிசித்த, ஸ்ரீமஹாத்மாக்களும், நீங்கள் அறியா வண்ணம், உங்களை தரிசித்த, ஸ்ரீமஹாத்மாக்களும், யோகிகள் & சித்தர்கள் ஒருங்கிணைந்து, சொன்ன சத்தியவாக்கு:— ஏ அன்பான! பணிவான பாமாவே! இந்த ஹிமாலயாவில்; கோடிக்கணக்காக, ஸாதுக்களும்! சந்நியாசிகளும்! யாத்திரை வாசிகளும்! அனேக வித சாதனையாளர்களும்! காயஸித்தி! நிமித்தமாக, வந்து, போகின்றனர்! அவரவர் வினை! மனம்! விருக்கு! ஏற்ற வாறுபவன், பெற்றுச் செல்கின்றனர்.




# ஆஸை?

உன்னுடன் வந்திருக்கும், இத்திருக்கூட்டு அன்பர்கள்! உன்னைப், பொறுக்கி எடுக்கப்பட்டு, வந்தவர்கள் ஆகும்.

நீ உன் அன்பர்களிடம், அடிக்கடி சொல்லும், வாசகம் :- திரு அண்ணாமலையை! நினைத்தால் முக்தி! என்றும்; திரு அண்ணாமலை! நினைத்தால் முக்தி! என்றும்; கூறிவிட்டு, அண்ணாமலையை நினைத்தால், உங்களுக்கு முக்தி இல்லை என்றும்; அண்ணாமலை! உங்களை நினைக்க வேண்டும் என்றும்; அந்த அண்ணாமலை! உங்களை நினைக்கும் அளவுக்கு நீங்கள் நடக்க வேண்டும் என்றும். ஆகவே அண்ணாமலை நினைத்தால்தான், உங்களுக்கு முக்தி உண்டு என்றும்; சத்திய பிரமாணமாக சொல்வாய். அதேநியதியில், இங்கு உள்ள மெய் மெய்யும்! இருக்கின்ற அனைத்து அன்பர்களும்!! (யோகிகளும் சித்தர்களும்)

(172)



உங்கள் அனைவரையும், நிம்ப தோடல்லாமல்! உங்கள் அனைவரையும், தரிசிக்கும் பாக்கியம்! பெற்றது; ஸ்ரீ ஸத்குரு கிருபையும்! எங்கள் பூர்வ புண்ணியம்! பலன்களுடைய தன்மையினால், அவை தர்மமாக மாறியதால், அப்பாக்கியம் பெற்றோம் என, மனம் நிறைந்து சுற்றி விட்டு, நீங்கள் எங்களை, தரிசிக்க முடியாவிட்டாலும், (அது முடியாதுதான்) நாங்கள் அனைவரும் உங்களை தரிசித்துக் கொண்டோமென, ஆனந்தமாக ஏற்கின்றனர்!

அன்பு குழந்தைகளே! உங்கள் ஸமய அனுபவ பாடலும் & பயிற்சியும்! எல்லோரையும் மகிழ்விக்கிறது. உங்களுக்கு, ஜீவன் முக்தியையும் தந்து விட்டது. (ஸத்குரு வாக்கிய நம்பிக்கையும் & வைராக்கியமும்தான் ஸ்ரீ வகாரணம்) எல்லாம் ஒன்றே! அது சிவமே! அது யாமே! யாமே அது! அதுவே நீங்கள்! இது ஸத்தியம்.

பாபா.



எதையும் வெறுக்காமல்! விருப்பம் வந்தேகிடும். அதேபோல் எதையும் விரும்பினாலும் வெறுப்பு வந்தேகிடும். இவ் வெறுப்பும்! அவ் விருப்பும்! இல்லாத நிலையில் அனுபவிக்கும் வை அனைத்தும் போதுமே என ஓர் பூரண நிறைவு பெறுவதுவே நிஜத்தியாகமாகிற ஆகும்.


சிவவாக்கியருக்காகச் சொன்ன?

# விரக்தியின் விளக்கம்!

ஒரு பொருள், வேண்டாம் என, வெறுத்து ஒதுக்குவது, **வெறுப்பின்** நிலையில், அதை விரக்தி எனச், சொல்வோம். இதன் உண்மை என்ன வென்றால்? ஏதாவது ஒன்றில் **விருப்பம்** இருந்தால் தானே, அதை வேண்டாம் என, வெறுக்க வேண்டும்? அப்படி யானால், விருப்பத்தை, இல்லாமல் செய்யலாமே? இந்த உண்மையை உணர்!

உனக்கு அயலாக, பொன் பொருளோ! பெண்ணோ! வேறு எந்த நாம ரூபமும், இருந்தால் தானே, அது வேண்டும், என விருப்பம் உண்டாகும்.

உனக்கு அயலாகத் தோன்றும் எந்த **நாமரூபமும்! உன்னுடையதாக!** இருந்தால், நீ விரும்பவும் முடியாது! நீ வெறுக்கவும் முடியாது! இயலாமல் போய் விடுமல்லவா? பெண் இனத்தை, உனக்கு அயலாகக் காணும் போதுதானே,



ஆசை உண்டாகிறது. அப்பெண் இனம், உன் மகனாக மாறிவிட்டால், இருந்துவிட்டால்

ஆசை எப்படி உண்டாகும்? பொன் பொருளும், எல்லா நாமரூபமும், உன்னுடையதாக இருக்கும்போது, உனக்கு ஆசை எப்படி உண்டாகும்?

எம் ஸ்ரீ அருணகிரி ஸத்குரு பாடல் கவனிப்பாயாக,

மாமன் மகனடியோர் மைந்தனியோ யாம் அறியோம்?


காமன் கணை எமக்கு, கணவாகு வேகுகட்டே!

மாமன் மகனாகி, மைந்தனியும் நீயென ஆனால்?

எல்லாம் ஸ்ரீ பகவான் பொருள், ஸ்ரீ பகவான் செயல் என ஆனால்? காமன் கணை எங்கே, பார்வையால் நாசம் என்கிறார். இதன் பொருள்? ஆஹா?

நாமரூப ஜக ஜீவ தோற்றம், எதுவாயினும், உனக்கு அயலாக கண்டால்? வெறுப்பும், விருப்பும் உண்டு.

நாமரூப, ஜக ஜீவ தோற்றம், எதுவாயினும் ஏகம் அயலாக, எதுவும் இல்லை என்ற, பேருணர்வு சாக்ஷியமானால், அங்கு ஆசையும், வெறுப்பும் உண்டாகாது.



இப்படியும், மனதை பாங்கி, சமாதான நிலையில்
**திருப்தி** செய்யலாம். அதாவது ஏ மனமே!
கோடானு கோடி ஜன்மா, எடுத்து எடுத்து, அனைத்திலும்
வாங்கியது, கொடுத்தது! போனது, வந்தது!
உண்டது, உண்ண கொடுத்தது! தொட்டது, தொடுவது
வாக இருந்தது! பார்த்தது, பார்க்கும் பொருளாக
இருந்தது! கேட்டது, கேட்கும் ஓசையாக
அமைந்தது! பேசியது, பேசும் வாக்காக இருந்தது!
இப்படி அனைத்திலும், **இதுபோதுமே!**
மேலும் மேலும், இவை கருக்காக
**தேவையா?** வேண்டாமே! என உறுதியான **ஞானம்**
**அறிவு** பூர்வமாக திருப்தியின் நிறைவு பெற்றுவிட்டு
அன்பு வெறுப்பின், விரக்தி தேவையில்லாமல் போயிவிடும்.
நிறைவின் ஆனந்தம், ஒன்றே தோன்றும். இதன்றான்
**பொறுமை** தான் முக்கியம்.

குரு பாபா.

அவனை தேடு! ஜாக்ரதாவஸ்தையில், நெறிவாய் சென்று அதுசிவமே! அதுயானே!
ஜாக்ரதையாக இருக்கவும்.



உ

# பக்தர்களுக்குமட்டும்!!!
# அத்வைத ஞானிக்குஅல்ல!!!
# குருவாயூர் கண்ணன்!


பற்றிய ஓர் சிறிய விளக்கம் (அவன் வாக்கு)

(1) குருவாயூரில் காண்கின்ற, சொரூபம் 3 வயது! விவரம் அறியா, குழந்தையாகும் (ஞானியின்தன்மை)

(2) கௌபீனமும் இல்லாத, அவதூதநிலை! யின் ஓர் குழந்தையாகும். (ஞானியின் தன்மை)

(3) கேட்பதற்கோ! பார்ப்பதற்கோ! குற்றம் குறை! வேதம்! விருப்பு வெறுப்பு! அடைவதற்கோ! **மனம்** விருத்தியாகா, குழந்தை (ஞானியின் தன்மை)

(4) கள்ளம்! கபடு! சூது! இல்லாத **பால்** போன்ற, குழந்தை உள்ளம். (ஞானியின் தன்மை)




(5) வெளிறு உள்ளம் பால்! பக்தியின் இறுக்கம் தயிர்! அதில் கடைந்து எடுத்த அத்வைத ஞானமே, வெண்ணெய் கையில் கொண்டிருந்தது. (ஞானியின் தன்மை)

(6) அவன் எடுப்பார் கை குழந்தை அழைக்கும் பக்கத்தில் அழைத்தால், கை போட்டு தாவி வரும் குழந்தை (நீ எந்த வடிவில் கருதினாலும், அந்த வடிவில் தோன்றுவான். சொந்த வடிவமும் பெயரும் இல்லாதவன். சுத்த மோன சின்மயம்!) (இதுவும் ஞானியின் தன்மை)

(7) எந்த ஆயுதமும் (குழலும்) இல்லாத நிர்பய (பயமற்ற) கூர்ந்த திருஷ்டியும்! குறும் சிரிப்பும் கொண்ட ஆனந்த சொருப குழந்தை! (ஓர் ஞானியின் தன்மை)

(8) பார்த்தவுடன் பரவசமும்! கண்ணா என எண்ணி, அழைத்தவுடன், தாபஸமும்!



நாமரூப, ஜக வாழ்வை, அனைவோரு
புசிக்கால்! இருப்பதில்! கிடைப்பதில்! நடப்பதில்!
இது உன்கருணையே என, பூரண திருப்தியின்
நிறைவோடு இருந்தால் ஓம் போன்று
குழந்தையாகவே, நீங்களும் மாறிவிடலாம்
எனச் சொல்வதை விட, யாம் மாற்றிவிடுவோம்
என, உறுதி கூறுகிறான், எமதப்பன் கண்ணன்.

ஆத்ம ஞான குழந்தைகளே! அஷ்டமியில்
பிறந்த எமதப்பன், இந்த எட்டு
வசனங்களையும், எழுதப் பணித்தான்.
அவன் கருவியாகிய, பேனா எழுதியது.
கொள்ளுவதும் தள்ளுவதும் } உங்கள் அறிவின் திறன் ஆகும்.
அடங்குக! அடக்காதே! அடங்குக! அடக்காதே!
குருவாயூர் கண்ணன்:- குரு என்றால் ஞானம்! வாயு என்றால்
யோகம்! என சொல்கிறான்! குருவாயூர் கண்ணன் பாபா.
எல்லாம் நீயே! அதுவாமே! அது நீங்களே




Abode of Love

You Are Everything!